**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2012**

**1.1 நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2.7 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.2.1 நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலை**

சபைக்குரிய 17 தோட்டங்களில் 16 தோட்டங்கள் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெறும் அடிப்படையில் தேறிய சொத்துக்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 252,874,366 வரை குறைவடைந்திருந்தது. முன்னைய வருடத்திற்கு ஒப்பீடாக இந்த தேறிய சொத்துக்களின் குறைவு 45 சதவீதமாக இருந்ததுடன் இந்த நிலைமையின் அடிப்படையில் திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதியுதவியின்றி சபையினை நடாத்திச் செல்லுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய பெறுமானத்தேய்வுக் கொள்கை மற்றும் விகிதாசாரம் ஈடுபடுத்தப்பட்டு உரிய பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்படாமையினால் 04 விடயங்களுக்குரிய ரூபா 72,041,092 தொகையான குறைவான பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கட்டுப்பாட்டிற்குப் புறம்பாக ஒனுகல்ஓய தோட்டத்தின் நிலையான சொத்துக்களாக ரூபா 6,013,927 தொகை நிதிக்ககூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) குத்தகை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் உரிய குத்தகை வாடகை ரூபா 7,140,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருமானமாக ரூபா 1,379,728 தொகை மாத்திரமே இனங்காணப்பட்டிருந்தது. அதன்

பிரகாரம், குத்தகை வாடகை வருமானம் ரூபா 5,760,272 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டமையினால் நட்டம் அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது.

(ஈ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதியை குத்தகை வடகைக்கு வழங்கியதற்காக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 செப்தெம்பர் வரை அறவிடவேண்டியிருந்த மின்சாரச் செலவினம் ரூபா 224,063 ஆக இருந்தது. இச் செலவினங்கள் இறுதிக் கணக்கின் மூலம் அறவிடவேண்டிய கட்டணமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தோட்டங்களுக்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக பேணப்படுகின்ற உள்ளக தோட்ட மாற்றுப் பேரேட்டுக் கணக்கு (Inter Estate Transaction) சமப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 11,344,825 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் பணிக்கொடை கணிப்பீடு செய்தல் பட்டோலைகளுக்கிடையே ரூபா 48,923,381 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலி மற்றும் பாதுகாப்பு விளக்குச் சொத்துக் கணக்கின் மீதி ரூபா 602,065 தொகையாக இருந்த போதிலும் 2012 சனவரி 01 ஆந் திகதி பேரேட்டில் முன்கொண்டுவரப்பட்ட மீதி ரூபா 454,088 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபையில் 2010 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிலிருந்து அறவிடவேண்டிய தொகை ரூபா 52,412,573 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கணக்குகளின் பிரகாரம் 2010 தொடக்கம் முதலீட்டுச் சபைக்குச் செலுத்த வேண்டிய எந்தப் பெறுமதியும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி நிறுவனத்துடனான நிதிக் குத்தகை உடன்படிக்கையின் பொறுப்புகளுக்குரிய பேரேட்டுக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 136,160 தொகையான செலவு மீதியாக இருந்ததுடன் நிறுவனத்தின் உரிய கோவைகள் மற்றும் பதிவேட்டின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு

செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 4,500,000 ஆகக் காணப்பட்டது.

**1.2.5 தொங்கல் கணக்கு**

பின்வரும் தொங்கல் கணக்குகளை நீண்ட காலமாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2 தோட்டங்களுக்குரிய 2 தொங்கல் கணக்குகளின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,353,300 ஆக இருந்த போதிலும் 6 தோட்டங்களுக்குரிய 6 தொங்கல் கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,925,888 ஆகக் காணப்பட்டது.

(ஆ) கந்தல்ஓய தோட்டத்தில் 2009 ஆம் ஆண்டிலிருந்து பொதுப் பேரேட்டில் பேணப்பட்டு வருகின்ற கொள்வனவுகளின் தொங்கல் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,735,704 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

(இ) தலைமை அலுவலகத்தின் பேரேட்டில் காணப்பட்ட தொங்கல் கணக்கில் ரூபா 1,158,171 தொகையான செலவு மீதி காணப்பட்டது.

**1.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சிலாபம் மணல் கம்பனியிலிருந்து குத்தகை வாடகையாக அறவிடவேண்டிய ரூபா 4,000,000 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் இந்தத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக ''ஜனவசம'' மற்றும் சிலாபம் மணல் கம்பனிகளுக்கிடையே உடன்பாடு காணப்படவில்லை.

(ஆ) ரஹதுன்கொட தோட்டத்தில் கொழுந்துத் தேயிலை Rossling hill தொழிற்சாலைக்கு வழங்குவதற்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 555,890 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விடயங்கள் மற்றும் அவற்றிற்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்பபிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 2,095,927,194 | (i) பட்டோலை<br>(ii) நிலையான சொத்துப் பதிவேடு<br>(iii) மெய்மையாய்வுச் சபை அறிக்கை<br>(iv) உரித்துறுதிச் சான்றிதழ் |
| (ஆ) | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | 377,872,062 | கணிப்பீடு செய்யப்பட்ட பட்டோலை |
| (இ) | இறுதியிருப்பு | 101,346,656 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஈ) | வியாபாரத்தில் கிடைக்க வேண்டியவைகள் | 145,831,182 | (i) பட்டோலை<br>(ii) மீதி உறுதிப்படுத்தல் |
| (உ) | முற்பணம் மற்றும் வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | 22,037,639 | (i) பட்டோலை<br>(ii) மீதி உறுதிப்படுத்தல் |
| (ஊ) | கிடைக்க வேண்டிய நிறுத்திவைக்கப்பட்ட வரி | 8,997,513 | வரிச் சான்றிதழ் |
| (எ) | நானாவித கடன்பட்டோர் | 342,975,525 | (i) பட்டோலை<br>(ii) மீதி உறுதிப்படுத்தல் |
| (ஏ) | சீராக்கல் கணக்கு | 36,289,472 | (i) நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பட்டோலை<br>(ii) காலப்பகுப்பாய்வு |
| (ஐ) | ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை நிதியம் / இலங்கை பெருந்தோட்ட சேமலாபச் சங்கம் /தோட்ட ஊழியர் சேமலாபச் சங்கம் | 625,670,242 | பட்டோலை |
| (ஒ) | பணிக்கொடை ஒதுக்கீடு | 745,185,629 | பட்டோலை |
| (ஓ) | அரசாங்க வங்கியின் கடன் மீதி | 22,970,326 | மீதி உறுதிப்படுத்தல் |

### 1.2.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | உழைக்கும் போதே வரி கணிப்பீடு செய்யும் போது நிதியற்ற நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக்கட்டண அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்யிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுச் சேர்ந்த பொருளாதார சேவைக் கட்டணத்தின் அளவு ரூபா 6,137,904 ஆக இருந்ததுடன் அது 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | வெளி நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,941,359 ஆக இருந்தது. அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | ஒவ்வொரு மாதத்திற்கான பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டப்பிரிவின் ஊழியர் சேமலாப பங்களிப்புப் பணம் ரூபா 382,371,113 தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு மாதத்திற்கான பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டப் பிரிவின் |

ஊழியர்களுக்கான பங்களிப்புப் பணம் ரூபா 29,141,216 தொகை அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம்

(i) நி.பி 135 — உத்தியோகத்தர்களுக்கு நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 187(3) — நாளாந்தம் வருமானப் பணம் அத்தினம் அல்லது அதற்குப் பிற்பட்ட தினம் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 10 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நளாந்தம் பெறப்பட்ட வருமானப் பணம் வங்கியில் வைப்பிலிடுதல் 03 முதல் 21 தினங்களுக்கிடைப்பட்ட வீச்சிலான தாமதத்துடன் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

(iii) நி.பி 371(2)

(i) யாதேனும் செயற்பாட்டிற்காக வழங்கப்படுகின்ற முற்பணம் அச்செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட்ட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 432,566 தொகையான முற்பணத் தீர்த்தல்கள் 1 முதல் 6 மாதங்கள் வரையான கால வீச்சில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பதவிநிலை உத்தியோகத்தருக்கே முற்பணம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் பதவி நிலையல்லாத உத்தியோகத்தருக்காகவும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) முற்பணம் ரூபா 20,000 ஐ விஞ்ச முடியாதிருந்த போதிலும் இந்த எல்லையினை விஞ்சி 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 996,197 தொகை வழங்கப்பட்டிருந்தது.

(iv) நி.பி 756, 757 — தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களில் காணப்படுகின்ற மனித மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் இருப்புக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை

| | |
|---|---|
| | அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) நி.பி 1646 | தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் பிரயாணங்கள் தொடர்பாக சில நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,095,927,194 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக கணக்கு வைத்தல் அல்லது சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) 1985 திசெம்பர் 20 ஆந் திகதிய 319 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | இலங்கை இராணுவத்தில் தொண்டர் படையணிக்கு விடுவிக்கப்பட்ட பதவிநிலை இரசாயனப் பரிசோதகரின் சேவையை முதல் 60 நாட்களை உங்களுக்குப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் சிவில் அதிகாரியினால் அந்த நாளுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் படிகளின் அளவு அதிகாரியினால் மீளவும் சிவில் அதிகாரிக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் 2007 சனவரி முதல் 2012 திசெம்பர் வரை செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் ரூபா 2,151,795 தொகை இலங்கை இராணுவத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ 39 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | உரித்தற்ற 06 உத்தியோகத்தர்களுக்காக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 333,500 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 199,543,725 நட்டத்தினை விளைவித்துள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 257,823,702 ஆக இருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 58,279,977 தொகையினால் நட்டம் வீழ்ச்சியடைந்திருந்தது. உற்பத்திக் கிரயம் 5 சதவீதத்தினால் குறைவடைந்தமை, செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்கள் 10 சதவீதத்தினால் குறைவடைந்தமை நட்டம் குறைவடைந்தமைக்கான காரணமாக இருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

**நிதி நிலைமை**

| | 2012 | 2011 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1:2.4 | 1:2.4 |
| திரவச் சொத்து விகிதம் | 1:2.8 | 1:2.6 |

**2.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

சபைக்கு எதிராக வெளிநபர்களினாலும் நிறுவனத்தினாலும் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சட்டத்தரணிக் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,202,488 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் மீளாய்வாண்டின் போது 16 தேயிலைத் தோட்டங்கள் மற்றும் ஒரு இறப்பர் தோட்டத்தின் செயற்பாடுகள் பேணப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் தோட்டப் பிரிவு பெற்ற நட்டம் ரூபா 226,476,498 ஆக இருந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டில் அது ரூபா 269,013,709 ஆக இருந்தது. அதனால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நட்டம் 15 சதவீத குறைவைக் காட்டியது.

(ஆ) சபையினால் ஒரு கிலோ தேயிலை உற்பத்தி செய்து பூர்த்தி செய்வதற்குரிய அடிப்படைக் கிரயம் ஒரு கிலோ தேயிலையை விற்பனை செய்யும் வருமானத்தில் ஈடுசெய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒரு கிலோவின் உற்பத்திக் கிரயம் (Cop) ஒரு கிலோவின் சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) மற்றும் அலகொன்றின் பங்களிப்பை இணக்கஞ் செய்த போது ஒரு கிலோ கிராமின் பங்களிப்பு நட்டம் ரூபா 13 முதல் ரூபா 469 வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமங்களின் பிரகாரம் மத்திய மலைநாட்டுத் தேயிலை ஒரு ஹெக்டேயருக்கு சாதாரண விளைச்சல் (பூர்த்தித் தேயிலை) 1200 கிலோ கிராம் அளவாகும். எவ்வாறாயினும் சபையின் 16 தோட்டங்களுக்குரிய தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விளைச்சல் 198 கிலோ கிராம் முதல் 1008 கிலோ கிராம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோப் தோட்டத்தின் தேயிலை உற்பத்தியின் போது மொத்த உற்பத்தியில் 70 சதவீதமான அளவு பொதுவாக பிரதான உற்பத்தித் தொகுதியாக பிரதான உற்பத்தித் தொகுதியாக இருக்க வேண்டிய போதிலும் இந்த தொழிற்சாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் தேயிலைக் கொழுந்துகளின் தரம் குறைந்த நிலையில் காணப்பட்டமையினால் பிரதான உற்பத்தித் தொகுதியின் பங்களிப்பு மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் வரை கீழிறங்கியிருந்தது.

(ஆ) நாற்றுமேடை ஆரம்பிக்கப்பட்டு 09 மாதங்கள் கடந்ததன் பின்னர் பிரதேசங்களில் நாட்டப்பட முடியுமாக இருந்த போதிலும் ரொக்வுட் தோட்டத்தில் 2009 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட நாற்றுமேடைகளில் 53,113 நாற்றுக்கள் தற்போதும் நாற்று மட்டத்திலேயே காணப்படுகின்றது. அந்த நாற்றுமேடைகளிலிருந்து உரிய காலத்தில் நாற்றுக்களை அகற்றி பிரதேசங்களில் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் இது வரையில் விளைச்சலைத் தருகின்ற 04 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்ய முடிந்திருக்கும்.

(இ) ரஹதுன்கொட தோட்டத்தில் மானியின்றி 5 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கும் தோட்ட அலுவலகத்திற்கும் மின்சாரத்தை வழங்குதல் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்பின் மூலம் வழங்கப்பட்ட காரணத்தினால் வீட்டுப் பாவனைக்காக வணிக

வீதத்தின் அடிப்படையில் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஈ) தோட்டங்களில் உள்ள பொருட் பதிவேட்டு விடயங்களை இனங்காணக்கூடிய வகையில் முறையான வகையில் பதிவேட்டில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 990 ஹெக்டேயரையுடைய கந்தல் ஓய தோட்டத்தில் தேயிலைத் தோட்டத்திற்காக 141 ஹெக்டேயர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய 849 ஹெக்டேயரும் வினைத்திறனான பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அங்கீகாரம் மற்றும் பாதீட்டு நிதியேற்பாடின்றி 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,593,180 தொகையான மூலதனச் செலவினத்தைச் செய்து ஹோப் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த குடிநீர் போத்தலில் அடைக்கும் செயற்திட்டம் மூலம் தண்ணீர் பொத்தலொன்று உற்பத்தி செய்வதற்கான அண்ணளவான கிரயம் ரூபா 17.90 ஆகும். எவ்வாறாயினும் விற்பனை செய்யும் போது ரூபா 14 தொடக்கம் ரூபா 35 வரையான பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும் கிரயத்தினைச் செய்யும் போது ஒரு கணக்கு அலகாகக் கருதி கணக்கு வைக்காமை மற்றும் விலையிடல் கொள்கையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 1982 மார்ச் 01 ஆந் திகதிய 183/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் றுக்கதென்ன தோட்டத்தில் 310 ஹெக்டேயர் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. றுக்கதென்ன தோட்டம் 1992 ஆம் ஆண்டில் தோட்டப் பிரதேசத்தில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு கையளிக்கும் போது 299 ஹெக்டேயர் மாத்திரம் கையளிக்கப்பட்டிருந்தமையினால் எஞ்சிய 11 ஹெக்டேயர் காணியிலும் என்ன செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக கணக்காய்விற்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதிர்கால உற்பத்திகளை விற்பனை செய்து நிதியினை ஈடு செய்யும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் தரகர் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட முற்பணம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 137,450,440 ஆக இருந்தது. இது தொடர்பாக அறவிடப்பட்ட வட்டி விகிதாசாரம் மற்றும் ஏனைய நிபந்தனைகள் தொடர்பாக இரு தரப்பினருக்கிடையே எழுத்து மூல உடன்பாடொன்று காணப்படவில்லை. ஒவ்வொரு தரகர் நிறுவனத்திற்காகவும் தனித்தனியான கணக்குகளை

வைப்பதற்கு மற்றும் அந்த கடன் பணத்திற்காக அறவிடப்பட்ட வட்டியினை தனியாக இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆம் ஆண்டின் போது ஹந்தான தோட்டத்தில் ஒரு பகுதி இலங்கை முதலீட்டுச் சபைக்கு கையளிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபையிலிருந்து ரூபா 50,000,000 தொகை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் பெறப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முதலீட்டுச் சபைக்கு அந்தக் காணியைக் கையளிக்க முடியாதிருந்ததுடன் அதற்காக மாற்றுக் காணியொன்றை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் இந்த நிலைமை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) எதிர்காலத்தில் காணிக் கூறுகளை வாடகைக்கு விடும் நோக்கத்துடன் வெளித்தரப்பினர்களிடமிருந்து முற்பணம் பெறுதல் மீளாய்வாண்டின் போது ரூபா 82,277,889 ஆக இருந்தது. இந்த முற்பணத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் போது உரிய சொத்துக்களைத் தீர்மானித்தல், அதற்காக பெறப்பட்ட அமைச்சின் காணிக்குழுவின் சிபார்சு, வாடகையினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தரப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கை, மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டுக் கட்டளை மற்றும் வாடகையாளரைத் தெரிவு செய்த அடிப்படை போன்ற அடிப்படைத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோப் தோட்டத்திலும் கந்தல்ஓய தோட்டத்திலும் ஊழியரல்லாத சமூர்த்தி உத்தியோகத்தருக்கும் மூன்று பாடசாலை ஆசிரியர்களுக்கும் தோட்டக்காரர்களுக்கு உரித்தான 04 உத்தியோகபூர்வ இல்லங்கள் குடியிருப்பிற்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது 13 உத்தியோகத்தர்களினால் கந்தல்ஓய தோட்டத்திற்குரிய 13 காணித் துண்டுகளுக்குரிய 59.14 ஹெக்டேயர் அதிகாரமின்றி உரிமை கோரப்பட்டிருந்ததுடன் இந்தக் காணியை மீள தோட்டத்திற்காக கைப்பற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(இ) ரஹதுன்கொடை தோட்டத்தில் 35 ஏக்கருக்கு மேற்பட்ட நில அளவில் 23 சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினராலும் உரிய அனுமதியின்றி உரிமை கோரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிறுவனம் இது வரையிலும் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை, தோட்டத் தொழிலாளர் சேமலாப நிதியம் மற்றும் இலங்கை பெருந்தோட்ட ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் ஆண்டின் போது மிகைக் கட்டணமாக முறையே ரூபா 1,136,967 , ரூபா 5,087,836 ரூபா 70,213 , ரூபா 248,399 தொகைகளாக ரூபா 6,543,415 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மின்சாரப் பட்டியல் செலுத்துவதிலுள்ள தாமதத்தினால் தோட்டங்களுக்குரிய ரூபா 1,037,674 தொகையான தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

காந்தல்ஓய தோட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலை 10 வருடங்களுக்கு முன்பிருந்து மூடப்பட்டிருந்ததுடன் அங்கு சேவையாற்றிய 60 வருடங்களை விஞ்சிய மூன்று ஊழியர்களிடமிருந்து வினைத்திறனான சேவை பெற்றுக் கொள்ளப்படாமல் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஊழியர்களுக்காக கடந்த 10 ஆண்டு காலங்களில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,742,280 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோப் தோட்டத்தில் குடிநீர் போத்தலில் அடைக்கும் செயற்திட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்ட தேறிய நட்டம் ரூபா 2,785,659 ஆக இருந்ததுடன் காலாவதியாகியமையினால் அழிவடைந்த போத்தல்களின் பெறுமதி ரூபா 80,000 ஆக இருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டின் போது ஹோப் தோட்டத்தில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட குடிநீர் போத்தல்களின் அளவு மற்றும் தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்த போத்தல்களின் அளவுகளுக்கிடையே 7730 போத்தல்களின் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 126,772 ஆக இருந்தது.

(ஆ) லொறி வாகனம் விபத்திற்குள்ளாகியமையின் காரணமாக அதன் பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட ரூபா 523,905 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்பாடு தன்மையில் உள்ள தொழிற்சாலை உரிய வகையில் பராமரிக்கப்படாமையினால் அந்த தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தி

செய்யப்படுகின்ற தேயிலை இலங்கை தேயிலை ஏல விற்பனையின் போது மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதுடன் விலையின் அடிப்படையில் தரப்படுத்தலின் போது அந்த தொழிற்சாலை அமைந்துள்ள உற்பத்திப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற இணையான தொழிற்சாலைகளுடன் இணக்கஞ் செய்த போது மிகவும் குறைந்த தரங்களில் தொடர்ச்சியான இடத்தைப் பிடித்திருந்தது.

(ஈ) வெளித்தரப்பினரினால் சபையின் தோட்டங்களில் பாரியளவான பகுதி பலாத்காரமாக பிடித்துவைக்கப்பட்டவை எனது முன்னைய ஆண்டுகளின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் தலைவரின் பதிலின் ஊடாக அந்த அனுமதியற்ற வசிப்பாளர்களினது பதிவோடான்று தயாரிக்கப்பட்டிருந்தமை எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்பாடுகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய செயல் முன்னேற்றம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரஹதுன்கொடை தோட்டத்தில் 2006 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்காக ரூபா 45,710 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக ரீதியில் காணப்படாத இந்த இருப்பு இறுதிக் கணக்கில் நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முல்ஹல்கெலே தோட்டத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 மே வரை எவ்வித வருமானமும் பெறப்படாது ஊழியர் சம்பளமாக ரூபா 13,404,948 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 தினங்களுக்குள் வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2012 ஆம் ஆண்டின் கணக்குகள் 2013 யூலை 04 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறு கணக்குகள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2011 - 2013 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தில் காணப்பட்ட மோசமான நிதி நிலைமை காரணமாக இந்த திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடுகளைக் கைவிடுவதற்கு 2011 ஒக்தோபர் 07 ஆந் திகதி கூடிய பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்தது.

**4.3 செயல் நடவடிக்கைத் திட்டம்**

2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்திற்கு ஒத்தாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் கணக்காய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக்குழு உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(i) புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பராமரிக்கப்படுதல்
(ii) வாடகை வருமானம் சேகரித்தல்
(iii) கணக்கீடு
(iv) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(v) நிலையான சொத்துக்கள்
(vi) வருமானம்